00026

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப் பரீட்சை - 2025

மட்டம் - 10

**SNPA608– விசேட தேவைகள்சார் கல்வியில் தொகைசார் ஆய்வுமுறைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி:- 17.03.2025 | நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

முதலாம் வினாவிற்கும் ஏனைய எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

**1.** இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் விசேட தேவைகள்சார் கல்வித்துறை, விசேட ஆசிரியர்களிடையே ஒரு ஆய்வுப் போட்டியை நடாத்தத் திட்டமிட்டுள்ளது. அதற்காக ஆசிரியர்களிமிருந்து முன்மொழிவுகளைக் கோரப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பின்வரும் கருப்பொருட்கள் தொடர்பாக ஆய்வு முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கலாம்.

- குறிப்பிட்ட கற்றல் இயலாமைகள்/ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனம்/டவுண் சிண்ட்ரோம்/கவனக்குறைவும் அதீத செயலூக்க ஒழுங்கீனமும் உள்ள சிறுவர்கள் (Children with specific Learning Disabilities / Autism Spectrum Disorder/ Down syndrome/ Attention Deficit Hyperactivity Disorder)
- மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல்மிகு சிறுவர்கள் (Gifted and Talented Children)
- உள்ளடங்கற் கல்வி (Inclusive Education)
- தனியாள் மையக் கல்வித் திட்டம்/தனியாள் மைய நிலைமாற்றுத்திட்டம் (Individualized Educational Plan / Individualized Transition Plan)
- உதவி தொழிநுட்பங்கள்/தாராளமயமாக்கப்பட்ட மற்றும் மாற்றீட்டுத் தொடர்பாடல் அமைப்புக்கள் (Assistive Technologies / Augmentative and Alternative Communication Systems)

விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்களில் ஒருவர் நீங்கள் என்று வைத்துக்கொள்வோம்.

**அ.** கொடுக்கப்பட்ட கருப்பொருள்களில் ஒன்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட ஆய்வுப் பிரச்சினையைக் கண்டறிந்து, ஆதாரங்களுடன் ஆய்வுப் பிரச்சினைத் தேர்வை நியாயப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** ஆய்வின் முக்கிய நோக்கத்தைக் குறிப்பிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரச்சினையுடன் தொடர்புடைய ஆய்வைச் செய்வதன் குறிப்பிடத்தக்க முக்கியத்துவங்கள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**இ.** ஆய்வின் முக்கிய நோக்கத்தைக் குறிப்பிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரச்சினையுடன் தொடர்புடைய மூன்று (03) குறிப்பான ஆய்வு குறிக்கோள்கள்/ஆய்வு வினாக்களை உருவாக்குக.

**(09 புள்ளிகள்)**

ஈ. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரச்சினையை ஆய்வு செய்வதற்கான **இரண்டு (02)** காரணங்களுடன் உங்கள் தேர்வை நியாயப்படுத்தி பொருத்தமான தொகைசார் ஆய்வு வடிவமைப்பைத் தேர்வு செய்க.

**(04 புள்ளிகள்)**

உ. நீங்கள் பயன்படுத்த விரும்பும் மாதிரி மற்றும் மக்கள் தொகையை (பொருத்தமானால் குறிப்பிட்டு), பொருத்தமான மாதிரி நுட்பத்தை நியாயப்படுத்தலுடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ஊ. தரவு சேகரிப்புக்கு நீங்கள் முன்மொழியும் கருவிகளைக் குறிப்பிட்டு, முன்மொழியப்பட்ட ஆய்வின் ஆய்வு நோக்கங்களை அடைய அவற்றின் பொருத்தப்பாட்டை நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

எ. ஆய்வுக்கு முன்மொழியும் தரவு பகுப்பாய்வு நுட்பங்களை (குறைந்தது **இரண்டு (02)**) குறிப்பிட்டு, அவற்றின் பொருத்தப்பாட்டை ஆதாரங்களுடன் ஆராய்க.

**(03 புள்ளிகள்)**

ஏ. உங்கள் **ஆய்வின் நான்கு (04)** வரையறைகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**
**(40 புள்ளிகள்)**

**2.** அளவைநிலை (Survey) ஆய்வு வடிவம், தொடர்பறி (Correlation) ஆய்வு வடிவம் மற்றும் அரை – பரிசோதனை சார் (Quasi – experimental) ஆய்வு வடிவம் ஆகிய ஆய்வு வடிவங்களிலிருந்து நீங்கள் விரும்பிய **இரண்டு (02)** ஆய்வு வடிவங்களைத் தேர்ந்தெடுத்து, பின்வரும் கருப்பொருள்களின் கீழ் அவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்தவும் தேவையான இடங்களில் எடுத்தக்காட்டுக்களை முன்வைக்க வேண்டும்.

அ. ஆய்வை முன்னெடுப்பதன் முக்கிய நோக்கம்

**(06 புள்ளிகள்)**

ஆ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு வடிவங்களின் முக்கிய பண்புகள் (குறைந்தது **நான்கு (04)** )

**(07 புள்ளிகள்)**

இ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு வடிவங்களின் பலங்கள் மற்றும் வரையறைகள் (ஒவ்வொன்றும் குறைந்தது **மூன்று (03)** )

**(07 புள்ளிகள்)**

**3.** அ. நிகழ்தகவு சார் (Probability) மற்றும் நிகழ்தகவு சாரா (Non – Probability) மாதிரி முறைகளுக்கு இடையிலான முக்கிய வேறுபாடுகளை **மூன்று (03)** எடுத்துக்காட்டுக்களைப் பயன்படுத்தி விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ஆ. தொகைசார் ஆய்வுகளில் குறிப்பாகப் பயன்படுத்தப்படும் **இரண்டு (02)** வெவ்வேறு மாதிரி முறைகளை விவரித்து ஒரு ஆய்வில் அந்த முறைகளை எவ்வாறு தழுவமைக்கலாம் (adopt) என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

இ. தொகைசார் ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி ஒரு மாதிரியைத் தேர்ந்தெடுக்கும் போது ஆய்வாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய மூன்று (03) சிக்கல்களை விளக்கி, அந்தச் சிக்கல்களைக் குறைக்க எடுக்கக்கூடிய மூன்று (03) நடவடிக்கைகளை பரிந்துரை செய்க.

(07 புள்ளிகள்)

**4.** அ. விசேட தேவைகள்சார் கல்விப் பரப்பில் ஆய்வுகளை முன்னெடுப்பதில் தொகைசார் ஆய்வு அணுகுமுறை எவ்வாறு பொருத்தமானது என்பதை **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** தொகைசார் ஆய்வுகளில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) வெவ்வேறு தரவு சேகரிப்பு முறைகளையும் அவற்றின் குறிப்பிட்ட பண்புகளையும் விவரித்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வில் அந்த முறைகளை (கருவிகளை) எவ்வாறு உருவாக்கிப் பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**இ.** தொகைரீதியான தரவுகளைச் சேகரிக்கும் போது ஆராய்ச்சியாளர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களை விளக்கி அந்தச் சவால்களைக் குறைக்கப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குக.

**(07 புள்ளிகள்)**

**5.** அ. தொகைசார் மற்றும் பண்புசார் தரவுகளுக்கு இடையிலான **மூன்று** (03) முக்கிய வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** விசேட தேவைகள்சார் கல்வி ஆய்வுகளில் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) தொகைசார் தரவு பகுப்பாய்வு முறைகளை எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

**இ.** தொகைசார் தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது ஆய்வாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று** (03) சவால்களை விளக்கி அந்தச் சவால்களைக் குறைக்கப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குக.

**(07 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*